ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,924—1970 සැප්තැම්බර් 18 වැනි සිකුරාදා – 1970.9.18
14,924 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I: தொகுதி (I)—பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்வதற்காகத் தனித் தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனம் .. | — | விலைக்கட்டளைகள் .. | .. |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | 517 | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. | — |
| நீதிச் சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | 518 | வரவு செலவுத் திரட்டுக்கள் .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. | 520 | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 526 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. | — | மாணுயிகளுக்கு அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. | 522 | "மதுவரிச் சட்ட" அறிவித்தல்கள் .. | — |


## மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 297

என். டி. 250/ஆர் ஈசிரி/4

### தரைப்படை—நிரந்தரப்படை—அதி உத்தமராம் மகா தேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி ஏற்றம்

கீழ்க்குறிப்பிடப்பெற்ற அலுவலர், 1969, பெப்புருவரி 1 ஆம் திகதியிலிருந்து லெவ்ரினன்ற்—கேணல் (குவாட்டர் மாஸ்ரர்) ஆகக் கடவர் :—

மேஜர் (குவாட்டர் மாஸ்ரர்) டானியல் டயஸ் அமரவர்த்தன, சி.எ.எம்.சி.

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

டபிள்யு. ரி. ஜயசிங்க,
பதில் நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு.
1970 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 7 ந் உ.
9-694

1970 இன் இல. 298

என் : டி. 51/ஆர்ஈசிரி

### தரைப்படை—நிரந்தரப்படை—அதி உத்தமராம் மகா தேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட மாற்றம்

கீழ்க்குறிப்பிடப்பட்ட அலுவலர், 1970, யூலை மாதம் 15 ஆம் திகதியிலிருந்து, முதுமுறை ஒழுங்கில் கப்ரின் தயாநந்த விஜயசிங்ஹ, சி. எஸ். ஆர். உக்கு உடனடுத்துப் பின்வரும் வண்ணம் இலங்கைச் சிங்கப் பேரணியின் 1 ஆம் பட்டாளத்திற்கு மாற்றப்படுகிறார் :—

கப்ரின் (தற்காலிக மேஜர்) எஷின் சந்திரகுப்த பர்ணுந்து, சி.எஸ்.சி.

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

டபிள்யூ. ரி. ஜயசிங்க,
பதில் நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, செத்தெம்பர் 5.
9-615

1970 இன் இல. 299

என் : டி/விஎவ்/43(ii)

### தரைப்படை—சி. வி. எவ்.—அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற தீவிர செயற்படு பட்டியலில் மீளச் சேர்த்துக்கொள்ளல்

1968, யூன் மாதம் 1 ஆம் திகதியிலிருந்து கீழ்க்குறிப்பிடப்பெற்ற அலுவலரை இலங்கைத் தொண்டர் படையைச் சேர்ந்த இலங்கைத் தேசிய காவற்படையின் 1 ஆம் பட்டாளத்தினது தீவிர செயற்படு பட்டியலில் கீழ்க்குறிப்பிடப்பெற்ற அலுவலரை

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அழுத்தகர் திணைக்களம்
கொழும்பு,
1970 ம் ஆண்டு யூன் மீ 2 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

மீளச் சேர்த்துக்கொள்ளுதலை அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்கள் அங்கீகரித்துள்ளார் :

லெவ்ரினன்ற் சந்திரசிறி ஞானத்திலக்க பிறஞ்ஞாசேகர பதிராஜா, சி. என். ஜி.

1968, யூன் மாதம் 21 ஆம் திகதிய 14,807 ஆம் என்கொண்ட கசெற்றில் பிரசுரிக்கப்பட்டதும் இவ்வலுவலரைப் பொது ஒதுக்குப்படைக்கு மாற்றுதல் தொடர்பானதுமான 1968 ஆம் ஆண்டின் 244 ஆம் எண்கொண்ட அறிவித்தல் இத்தால் நீக்கப்படுகிறது.

அதி உத்தமரின் ஆணைப்படி,

ஏ. ஆர். ரத்னவேல்,
பதில் நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, ஓகத்து 27.

9-616

---

1970 இன் இல. 300

எண். டி/விளவ்/42 (IV)

## தரைப்படை—சி. வி. எவ்.—அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அரசாணை அமர்வும் மாற்றமும்

கீழ்க்குறிப்பிடப்பெற்ற உவாறன்ற் ஒபிசரை 1970, செத்தெம்பர் மாதம் 1 ஆம் திகதியிலிருந்து லெவ்ரினன்ற் (குவாட்டர் மாஸ்ரர்) ஆக அரசாணை அமர்வு செய்தலையும் இலங்கைத் தேசிய காவற்படையின் 1 ஆம் பட்டாளத்திற்கு மாற்றுதலையும் அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்கள் அங்கீகரிப்பதில் களிப்படைந்துள்ளார் :—

8 உவாறன்ற் ஒபிசர் II சதசிங்ஹ வில்பிறெட் சுகததாஸ.

அதி உத்தமரின் ஆணைப்படி,

ஏ. ஆர். ரத்னவேல்,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 3 ந உ.

9–693

---

1970 இன் இல. 301

எண். டி. 312/ஆர்சசிரி

## இலங்கை அரச கடற்படை—அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறல்

கீழ்க்குறிப்பிடப்பட்ட அலுவலர் 1970, ஒற்றோபர் மாதம் 1 ஆம் திகதியிலிருந்து இலங்கை அரச கடற்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுகிறார் :—

லெவ்ரினன்ற்—கொமான்டர் (எஸ்.) ஈ. டி. நவரத்னம், இலங். அ.க.

அதி உத்தமரின் ஆணைப்படி,

டபிள்யு. ரி. ஜயசிங்க,
பதில் நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 7 ந உ.

9–695

---

1970 இன் இல. 302

எண். டி. 42/ஆர்சசிரி

## இலங்கை அரச கடற்படை—அலுவலர்களின் நியமனங்கள்

அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்கள் இலங்கை அரச கடற்படையில் பின்வரும் நியமனத்தைச் செய்வதில் களிப்படைந்துள்ளார் :—

1970, ஓகத்து மாதம் 7 ஆம் திகதியிலிருந்து மா. ம. இலங். சே. கஜபாஹுவின் கொமான்டிங் ஒபிசர் ஆகக் கடவர் :

லெவ்ரினன்ற்-கொமான்டர் (ஜி) ஏ. டபிள்யூ. எச். பெரேரா, இலங். அ. க.

அதி உத்தமரின் ஆணைப்படி,

டபிள்யு. ரி. ஜயசிங்க,
பதில் நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, செத்தெம்பர் 5.

9-618.

---

1970 இன் இல. 303

எண். டி. 42/ஆர்சசிரி

## இலங்கை அரச கடற்படை—அலுவலர்களின் நியமனங்கள்

அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்கள் இலங்கை அரச கடற்படையில் பின்வரும் நியமனத்தை அங்கீகரிப்பதில் களிப்படைந்துள்ளார் :—

1970, செத்தெம்பர் 15 ஆம் திகதியிலிருந்து மா. ம. இலங். சே. றங்கல்லவின் கொமாண்டிங் ஒபிசர் ஆகக் கடவர் :

லெவ்ரினன்ற்-கொமான்டர் ஜி. எச். எம். பி. எலிக்கவெல, இலங். அ.க.

அதி உத்தமரின் ஆணைப்படி,

டபிள்யூ. ரி. ஜயசிங்க,
பதில் நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, செத்தெம்பர் 5.

9-619

---

# நீதிச் சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 304

| உத்தியோகத்தர் பெயர் | புதிய நியமனம் | புதிய நியமனம் செயற்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. ஆர். டி. பி. ஜயசேகர .. | மேலதிக நீதவான் முதலியன, நீர்கொழும்பு | 1970 செப்ரெம்பர் 9 விருந்து | மறு அறிவித்தல் வரை |
| திரு. ஏ. சிவானந்தன் .. | இலங்கை நீதிச் சேவையில் ஒரு பதில் உத்தியோகத்தரும், எண்ணிண்மிக்க உத்தியோகத்தரும், மேலதிக நீதவான் முதலியனவும், கேகாலை | 1970 செப்ரெம்பர் 1 லிருந்து | மறு அறிவித்தல வரை |
| திரு. ஏ. எஸ். விஜதுங்க .. | மேலதிக நீதவான் முதலியன, பலப்பிட்டி | 1970 செப்ரெம்பர் 1 லிருந்து | மறு அறிவித்தல் வரை |

| உத்தியோகத்தர் பெயர் | புதிய நியமனம் | புதிய நியமனம் செயற்படும் திகதி | குறிப்பு |
|---|---|---|---|
| திரு. ஈ. ஏ. விஜகுலசூரிய .. | மேலதிக நீதவான் முதலியன, மாத்தறை | 1970 செப்ரெம்பர் 1 விருந்து | மறு அறிவித்தல் வரை |
| திரு. டி. விமலரட்ண .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, கொழும்பு. அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1970 செப்ரெம்பர் 13 விருந்து | கொழும்பு மாவட்ட நீதிமன்ற 10956/எல், 10679/எல இலக்க வழக்குகளை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. ஏ. டபிள்யு. குணரட்ண .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, மாத்தறை. அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1970 ஒக்டோபர் 1 விருந்து .. | மாத்தறை மாவட்ட நீதிமன்ற பி/5043, மாத்தறை விண்ணப்ப நீதிமன்ற சிஆர்/8559 இலக்க வழக்குகளை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. ஜே. எஸ். ருஜபக்ச .. | மேலதிக நீதவான் முதலியன, சிலாபம்–புத்தளம் | 1970 ஒகஸ்ட் 24, செப்ரெம்பர் 11 | திரு. எஸ். பி. குணவர்த்தன இல்லாத காலங்கள் |
| திரு. எச்.ஈ.எஸ். விக்ரமரட்ண .. | கொழும்பு மேலதிக நீதவான் முதலியன, ஹோமகமவில் | 1970 ஒகஸ்ட் 29 .. | திரு. சி. அமெரசிங்க இல்லாத காலம் |
| திரு. எஸ். மாதவருஜா .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, திருகோணமலை | 1970 செப்ரெம்பர் 7 விருந்து 10 வரை | திரு. டி. சி. டபிள்யு. விக்ரமசேகர இல்லாத காலங்கள் |
| திரு. வி. ஜே. சி. பெரேரா .. | குருணுகல் மேலதிக நீதவான் முதலியன, குளியப்பிட்டியில் | 1970 ஒகஸ்ட் 30 விருந்து செப்ரெம்பர் 1 வரை | திரு. டி. எஸ். டி. பி. ஆர். சேனனுயக்க இல்லாத காலங்கள் |
| திரு. டி. பி. ரணசிங்க .. | மேலதிக நீதவான் முதலியன, கம்பக .. | 1970 செப்ரெம்பர் 4, 5 .. | திரு. ஜே. சி. ஏ. சி. எம். எஸ். சில்வா இல்லாத காலங்கள் |
| திரு. என். சின்னையா .. | மட்டக்களப்பு மேலதிக மாவட்ட நீதிபதி, கல்முனை முதலிய இடங்களில் | 1970 செப்ரெம்பர் 4 விருந்து 9 வரை | திரு. ரி. என். அபேவீர இல்லாத காலங்கள் |
| திரு. டி. பி. ரணசிங்க .. | மேலதிக நீதவான் முதலியன, கம்பக .. | 1970 ஒகஸ்ட் 30 .. | திரு. டபிள்யூ. பி. என். டீ சில்வா இல்லாத காலம் |
| திரு. வி. யு. பெர்னுன்டோ .. | மேலதிக நீதவான் முதலியன, களுத்துறை | 1970 செப்ரெம்பர் 1 விருந்து 4 வரை | திரு. சி. மனேகரா இல்லாத காலங்கள் |
| திரு. ஜே. எஸ். ருஜபக்ச .. | மேலதிக மாவட்ட நீதிபதி முதலியன, சிலாபம்–புத்தளம் | 1970 செப்ரெம்பர் 4 விருந்து 8 வரை | திரு. எம். ஏ. எம். உசேன் இல்லாத காலங்கள் |
| திரு. சி. இராசையா .. | தீவுகள் முதலியவற்றின் ஊர்நீதி மன்ற மேலதிகத் தலைவர் | 1970 செப்ரெம்பர் 10 விருந்து | சங்கானை ஊர்நீதிமன்ற 6174 இலக்க வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. கே. கணபதிப்பிள்ளை .. | தென்மராட்சி முதலியவற்றின் ஊர்நீதி மன்றப் பதில் தலைவர் | 1970 ஒகஸ்ட் 20, 21 .. | திரு. கே. சண்முகலிங்கம் இல்லாத காலங்கள் |
| திரு. ஏ. சி. ஜபார் .. | பாணமைப்பற்று முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 ஒகஸ்ட் 28 விருந்து 30 வரை | திரு. எஸ். ருஜனுதன் இல்லாத காலங்கள் |
| திரு. கே. ஏ. அரசக்கோன் .. | எருவில்–பொறைதீவு முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 ஒகஸ்ட் 30 விருந்து செப்ரெம்பர் 1 வரை | திரு. சி. ஆர். ருஜசிங்கம் இல்லாத காலங்கள் |
| திரு. ரி. யு. கரவிற்ற .. | நுவரகம்பலாத்த முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 ஒகஸ்ட் 28 .. | திரு. பி. எஸ். விக்ரமசிங்க இல்லாத காலம் |
| திரு. என். எதிரிசிங்க .. | நுவரகம்பலாத்த முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 ஒகஸ்ட் 27 | திரு. பி. எஸ். விக்ரமசிங்க இல்லாத காலம் |
| திரு. ஜி. சூரியஆராச்சி .. | கல்கமுவ காரியாதிகாரிப் பிரிவு முதலியவற்றின் ஊர்நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 ஒகஸ்ட் 21, 22 .. | திரு. எம். எம். பெரேரா இல்லாத காலங்கள் |
| திரு. ஜி. சூரியஆராச்சி .. | குளியப்பிட்டி காரியாதிகாரிப் பிரிவு முதலியவற்றின் ஊர்நீதிமன்ற மேலதிக தலைவர் | 1970 செப்ரெம்பர் 5 விருந்து | பொல்காவலை ஊர்நீதிமன்ற 12610 இலக்க வழக்கை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு |
| திரு. ஆர். வி. வில்வருஜா .. | வவுனியா தெற்கு முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில தலைவர் .. | 1970 ஒகஸ்ட் 29, 30 .. | திரு. கே. சின்னத்தம்பி இல்லாத காலங்கள் |
| திரு. ஐ. பெர்னுன்டோ .. | பிற்றிகல் கோறளை முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 ஒகஸ்ட் 24 .. | திரு. பி. ஜே. எல். ஏ. பெரேரா இல்லாத காலம் |
| திரு. பி. வி. சேனுதிருஜா .. | வவுனியா வடக்கு முதலியவற்றின் ஊர் நீதிமன்றப் பதில் தலைவர் | 1970 செப்ரெம்பர் 6 .. | திரு. ஏ. எம். ஐ. சாகீட் இல்லாத காலம் |
| ஜனுப் எம். எம். உவைஸ் .. | பதில் காதி, களுத்துறை நீதிபரிபாலன மாவட்டம். அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1970 ஒகஸ்ட் 21 விருந்து செப்ரெம்பர் 6 வரை | மௌலவி அல்அஜ் எம். செய்யது அகமது இல்லாத காலங்கள் |
| அல்அஜ் ஏ. எச். எம். ஜெசெய்ல் | பதில் காதி, உடுனுவர அரசிறைப் பிரிவு. அவரது ஏனைய கடமைகளுடன் கூடுதலாக | 1970 செப்ரெம்பர் 1 லிருந்து மூன்று மாதங்கள் | ஜனுப் ஏ. எச். ஜுயினுதீன் இல்லாத காலங்கள் |

நீதிச்சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. 573, கொழும்பு 12,
1970 ம் ஆண்டு செப்ரெம்பர் மீ 10 ந் உ.

சிறிமேவன் அமெரசிங்க,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

9–766

## மற்றைய நியமனங்களும் பிறவும்

*1970 இன் இல. 305*

பா 4/சாவி 15/27., பா 4/சாவி/நில 43., பா 4/சாவி/நில 23., பா 4/சாவி 28/178., பா 4/சாவி 38/125., பா 4/சாவி 28/176., பா 4/சாவி 35/60., பா 4/சாவி 6/54., பா 4/சாவி/சாவி 16/116., பா 4/சாவி 20/122.

### நீதிமன்றங்கள் கட்டளைச்சட்டம்

**82 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்**

(6 ஆம் அத்தியாயமான) நீதிமன்றங்கள் கட்டளைச்சட்டத்தின் 82 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு நீதி அமைச்சர், ஜுசே மரியா ஜயமான்ன ஆகிய யான்—

1. சமாதான நீதவானும் வழக்கறிஞருமான எஸ். ஏகரத்ன அவர்களை பலப்பிட்டி நீதிநிருவாக மாவட்டத்திற்கான உத்தியோகத் தொடர்பற்ற நீதவானொருவராகவும்,
2. பி. எம். டபிள்யு. விஜயசூரிய அவர்களை, அரச கணக்காய்வுத் திணைக்களத்தின் முது உதவிக் கணக்காய்வாளர் தலைமையதிபதியாகவிருக்கும் காலத்துள் கொழும்பு நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,
3. வி. எஸ். நடராஜன் அவர்களை, முது உதவி கம்பனிகள் பதிவாளர் பதவியை வகிக்கும் காலத்துள் இலங்கை முழுவதிலுமுள்ள நீதிநிருவாக மாவட்டங்களுக்குமான சமாதான நீதிவானொருவராகவும்,
4. ஆர். எல். த சில்வா அவர்களை, உதவிக் கம்பனிகள் பதிவாளர் பதவியை வகிக்கும் காலத்துள் இலங்கை முழுவதிலுமுள்ள நீதிநிருவாக மாவட்டங்களுக்குமான சமாதான நீதிவானொருவராகவும்,
5. சமரவீரகே பேலின் வைத்தியரத்ன அவர்களை குருநாகல் நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,
6. சமரகோன் முதியான்சேலாகே பத்மசேகர அவர்களை குருநாகல் நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,
7. அம்பேகொட கீகியனகே தொன் தயாநந்த பதிரன அவர்களை குருநாகல் நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,
8. ரணசிங்க முதியன்சேலாகே சோமபால ரணசிங்க அவர்களை குருநாகல் நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,
9. ஆரியதாச மாரசிங்க அவர்களை கேகாலை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,
10. பதிரன்கெலாகே ஜயசேகர அவர்களை குருநாகல் நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,
11. கோமாரகே தயா குணசேகர அவர்களை பதுளை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,
12. மாதுவகே பத்மபால அவர்களை அவிசாவலை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,
13. தொன் கர்மானிஸ் பீற்றர் பாண்டிபெரும அவர்களை மாத்தறை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நிதிவானொருவராகவும்
14. தொன் சாமெல் ரணதுங்க அவர்களை மாத்தறை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,
15. சொமி ராஜபக்ஷ யாபா அவர்களை மாத்தறை நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்,
16. முகமது கனி பசீர் அவர்களை யாழ்ப்பாணம் நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும்

இத்தால் நியமிக்கின்றேன்.

ஜே. எம். ஜயமான்ன,
நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு.
கொழும்பு,
1970 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 10 ந் உ.

9—761/1

---

## திருத்தம்

இல. ப 4/எஸ்வி 9/200

1970, செத்தெம்பர் 4 ஆந் தேதிய 14,922 ஆம் இலக்க அரசாங்க கசெற்றின் பகுதி I பிரிவு I இன் 656 ஆம் பக்கத்தில் வெளியான 1970 இன் 279 ஆம் இலக்க அறிவித்தல், " (4) சியம்பலபிட்டிய விஜயரத்ன அவர்களைக் கண்டி நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும் " என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக " (4) சியம்பலப்பிட்டிய விஜேரத்ன அவர்களைக் கண்டி நீதிநிருவாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானொருவராகவும் " என்னுஞ் சொற்களையிடுதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

ஜே. எம். ஜயமான்ன,
நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு,
1970 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 10 ந் உ.

9–761/2

---

*1970 இன் இல. 306*

எமது இல. ஈபி/ஏ—3.

பின்வரும் நியமனங்களைச் செய்வதில் கௌரவ பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அவர்கள் மகிழ்ச்சி அடைகிறார் :—

மொனருகலை நிருவாக மாவட்டத்தின் அதிகார பூர்வமான அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ. யே. பர்ஞந்து அவர்கள், தமது சொந்தக் கடைமைகளுடன், மொனருகலை நிருவாக மாவட்டத்திற்குப் பெற்றோலிகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உள்ளூர் அதிகாரியாக 1970, யூலை மாதம் 17 ம் தேதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கப்படும்வரை கடமைபுரிய.

பதுளை நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான பதில் அரசாங்க அதிபர் திரு. பி. எஸ். விஜயவீர அவர்கள், தமது சொந்தக் கடமைகளுடன், பதுளை நிருவாக மாவட்டத்திற்கு, பெற்றோலியக் கட்டளைச் சட்டத்தின்கீழ் உள்ளூர் அதிகாரியாக, 1970, யூன் மாதம் 13 ம் தேதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கப்படும்வரை கடமை புரிய.

புத்தளம் நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான பதில் அரசாங்க அதிபர் திரு. பீ. ஜி. புன்ஜிஹேவ அவர்கள், தமது சொந்தக் கடமைகளுடன், பதுளை நிருவாக மாவட்டத்திற்கு, பெற்றோலியக் கட்டளைச் சட்டத்தின்கீழ் உள்ளூர் அதிகாரியாக 1970, யூன் மாதம் 18 ம் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை கடமை புரிய.

அம்பாறை நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான அரசாங்க அதிபர் திரு. ஆர். பி. வீரக்கூன் அவர்கள், தமது சொந்தக் கடமைகளுடன், அம்பாறை நிருவாக மாவட்டத்திற்கு, பெற்றோலியக் கட்டளைச் சட்டத்தின்கீழ் உள்ளூர் அதிகாரியாக 1970, யூன் மாதம் 18 ம் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை கடமை புரிய.

மாத்தளை நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான பதில் அரசாங்க அதிபர் திரு. எச். ஏ. பீ. அபேவர்த்தன அவர்கள், தமது சொந்தக் கடமைகளுடன், மாத்தளை மாவட்டத்திற்கு, பெற்றோலியக் கட்டளைச் சட்டத்தின்கீழ் உள்ளூர் அதிகாரியாக, 1970, யூன் மாதம் 12 ம் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை கடமை புரிய.

கேகாலை நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான பதில் அரசாங்க அதிபர் திரு. எஸ். மறலண்ட அவர்கள், கண்டி நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான அரசாங்க அதிபராகக் கடமை ஆற்றும் காலத்தில், தமது சொந்தக் கடமைகளுடன், கண்டி மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசம் தவிர்ந்த கண்டி நிருவாக மாவட்டத்திற்கு, பெற்றோலியக் கட்டளைச் சட்டத்தின்கீழ் உள்ளூர் அதிகாரியாக 1970, யூன் மாதம் 15 ம் தேதி முதல் 1970, யூலை மாதம் 4 ம் தேதி வரை கடமை புரிய.

கண்டி நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான பதில் அரசாங்க அதிபர் திரு. எஸ். மறலண்ட அவர்கள், தமது சொந்தக் கடமைகளுடன், கண்டி மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசம் தவிர்ந்த கண்டி நிருவாக மாவட்டத்திற்கு, பெற்றோலியக் கட்டளைச் சட்டத்தின்கீழ், உள்ளூர் அதிகாரியாக 1970, யூலை மாதம் 5 ம் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை கடமை புரிய.

காலி நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான பதில் அரசாங்க அதிபர் திரு. வி. சி. பி. உணந்தென்ன அவர்கள், தமது சொந்தக் கடமைகளுடன், காலி மாநகரசபைக்குட்பட்ட பிரதேசம் தவிர்ந்த காலி நிருவாக மாவட்டத்திற்கு, பெற்றோலியக் கட்டளைச்சட்டத்தின்கீழ், உள்ளூர் அதிகாரியாக 1970, யூன் மாதம் 28 ம் தேதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கப்படும்வரை கடமை புரிய.

காலி நிருவாக மாவட்டத்தின் பதில் மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜி. பீ. எஸ். யு. டீ சில்வா அவர்கள் காலி நிருவாக மாவட்டத்தின் அரசாங்க அதிபர் திரு. வீ. சீ. பி. உனந்தென்ன அவர்கள் தீவிற்கு வெளியே இருக்கும் பொழுது, காலி நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான அரசாங்க அதிபராகக் கடமை ஆற்றும் காலத்தில் தமக்குரிய கடமைகளுடன், காலி மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசம் தவிர்ந்த காலி நிருவாக மாவட்டத்திற்கு, பெற்றோலியக் கட்டளைச் சட்டத்தின்கீழ், உள்ளூர் அதிகாரியாக, 1970, யூன் மாதம் 29 ம் தேதிமுதல் கடமை புரிய.

அனுராதபுரம் நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான பதில் அரசாங்க அதிபர் திரு. ஏ. பீ. பி. மனம்பெரி அவர்கள், தமது சொந்தக் கடமைகளுடன், அனுராதபுரம் நிருவாக மாவட்டத்திற்கு, பெற்றோலியக் கட்டளைச் சட்டத்தின்கீழ், உள்ளூர் அதிகாரியாக 1970, யூலை மாதம் 4 ம் தேதிமுதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை கடமைபுரிய.

கொழும்பு நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான பதில் அரசாங்க அதிபர் திரு. டி. டபிள்யூ. டீ அல்விஸ் அவர்கள், தமது சொந்தக் கடமைகளுடன், கொழும்பு மாநகரசபை எல்லைக்குட்

பட்ட பிரதேசம் தவிர்ந்த கொழும்பு நிருவாக மாவட்டத்திற்கு, பெற்றோலியக் கட்டளைச் சட்டத்தின்கீழ், உள்ளூர் அதிகாரியாக 1970, யூலை மாதம் 4 ம் தேதி முதல் மறு கட்டளை பிறப்பிக்கப்படும் வரை கடமை புரிய.

திருகோணமலை நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான பதில் அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ. எல். பர்ணாந்து அவர்கள், தமது சொந்தக் கடமைகளுடன், திருகோணமலை நிருவாக மாவட்டத்திற்கு, பெற்றோலியக் கட்டளைச் சட்டத்தின்கீழ், உள்ளூர் அதிகாரியாக,1970, யூலை மாதம் 4 ம் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை கடமைபுரிய.

இரத்தினபுரி நிருவாக மாவட்டத்தின் பதில் மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். ஜீ. சமரசிங்க அவர்கள், இரத்தினபுரி நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான அரசாங்க அதிபராகக் கடமை ஆற்றும் காலத்தில், தமது சொந்தக் கடமைகளுடன், இரத்தினபுரி நிருவாக மாவட்டத்திற்கு, பெற்றோலியக் கட்டளைச் சட்டத்தின்கீழ், உள்ளூர் அதிகாரியாக 1970, யூன் மாதம் 17 ம் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை கடமை புரிய.

யாழ்ப்பாணம் நிருவாக மாவட்டத்தின் மேலதிக அரசாங்க அதிபர் திரு. யே. எம். சபாரத்தினம் அவர்கள் யாழ்ப்பாணம் நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான அரசாங்க அதிபராகக் கடமை ஆற்றும் காலத்தில், தமது சொந்தக் கடமைகளுடன், யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு, பெற்றோலியக் கட்டளைச் சட்டத்தின்கீழ், உள்ளூர் அதிகாரியாக 1970, யூலை மாதம் 4 ம் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை கடமை புரிய.

கேகாலை நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான பதில் அரசாங்க அதிபர் திரு. கே. எச். யே. விஜயதாச அவர்கள், தமது சொந்தக் கடமைகளுடன், கேகாலை நிருவாக மாவட்டத்திற்கு, பெற்றோலியக் கட்டளைச் சட்டத்தின்கீழ், உள்ளூர் அதிகாரியாக 1970, யூலை மாதம் 4 ம் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை கடமை புரிய.

வவுனியா நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான அரசாங்க அதிபர் திரு. என். டி. ஜயவீர அவர்கள் தமது சொந்தக கடமைகளுடன், வவுனியா நிருவாக மாவட்டத்திற்கு, பெற்றோலியக் கட்டளைச் சட்டத்தின்கீழ், உள்ளூர் அதிகாரியாக 1970, யூலை மாதம் 4 ம் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை கடமை புரிய.

களுத்துறை நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான பதில் அரசாங்க அதிபர் திரு. எஸ். டி. சி. சமரதுங்க அவர்கள், தமது சொந்தக் கடமைகளுடன், களுத்துறை நிருவாக மாவட்டத்திற்கு, பெற்றோலியக் கட்டளைச் சட்டத்தின்கீழ் உள்ளூர் அதிகாரியாக 1970, யூலை மாதம் 9 ம் தேதி முதல் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை கடமை புரிய.

பி. மகாதேவ,
நிரந்தரச் செயலாளர்.

பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு
அலுவல்கள் அமைச்சு,
சேர் நிரங்சன் சதுக்கம்,
கொழும்பு 7.
1970, ஆகஸ்ட் மாதம் 19 ம் தேதி.

9-535

---

*1970 இன் இல. 307*

**நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)**

விமலநாதன் சொக்கநாதன் அவர்கள் கொழும்பு நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் கடமை பார்க்கும் பிரசித்த நொத்தாரிசுவாக, கௌரவ பொது நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டுஅலுவல்கள் அமைச்சர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

9-554

---

*1970 இன் இல. 308*

**காணி அபிவிருத்திச் சட்டப் பிரமாணம் (320 ன் கீழ் அறிவித்தல்)**

காணி அபிவிருத்திச் சட்டப் பிரமாணம் 6 (1) ம் பிரிவின்கீழ் கௌரவ கமத்தொழில், காணி அமைச்சர் அவர்களால் கீழே காட்டப்பட்டுள்ள பிரிவுக்காரியாதிகாரிகள் தங்கள் கடமைகளுடன் அதற்கு மேலாக அவரவர் பெயர்களுக்கு எதிரே காட்டப்பட்டுள்ள பிரிவுகளில் அதில் காட்டப்பட்டுள்ள திகதியிலிருந்து காணி அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

கொழும்பு 1,
1970 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 22 ந் வ.

ஆர். ரி. ரத்னதுங்க,
மேலதிக நிரந்தரச் செயலாளர்.
கமத்தொழில் காணி அமைச்சர்.

| பெயர் | மாவட்டம் | பிரிவு | திகதி |
|---|---|---|---|
| திரு. கே. ரி. விமலரத்ன .. | .. மாத்தறை | .. தலைமை நிலையம் | .. 70.1.18 |
| திரு. ஆர். கே. எச். எம். பிரனாந்து | .. கேகாலை | .. தெ. கொ. ம் பாதவுளத்கம | .. 69.11.1 |
| திரு. டி. வி. வியனகெதற .. | .. கேகாலை | .. பெலிகல் கோரளை | .. 69.11.1 ல் இருந்து 70.1.31 வரை |
| திரு. ரி. வி. ரத்னாயக .. | .. கேகாலை | .. பெலிகல்கோரளை | .. 70.2.1 |
| திரு. எம். வி. சந்திரதாச த சில்வா | .. பதுளை | .. பசறை .. | .. 70.4.26 |
| திரு. பி. டி. ஜே. விஜேசேகர .. | .. இரத்தினபுரி | .. தலைமை நிலையம் | .. 70.1.2 |
| திரு. சீ. ஏ. சமரவீர .. | .. இரத்தினபுரி | .. இரத்தினபுரி .. | .. 70.3.15 |
| திரு. எஸ். என். பி. டப்ளியூ. எம். மைத்திரிபால.. | இரத்தினபுரி | .. அட்டக்கலன் கோரளை | .. 69.6.1 |

9-632/1

---

*1970 இன் இல. 309*

**காணி அபிவிருத்திச் சட்டப்பிரமாணம்**
**(320 ன் கீழ் அறிவித்தல்)**

காணி அபிவிருத்திச்சட்டப் பிரமாணம் 6 (1) ம் பிரிவின் கீழ் கௌரவ கமத்தொழில், காணி அமைச்சர் திரு. ஆர். டப்ளியூ. எச். எம். திலகரத்ன ரவிராஜா பொதுசன தொடர்பு அதிகாரி அவர்களை அவருடைய கடமைகளுடன் மேலதிகமாக காணி உத்தியோகத்தராக இரத்தினபுரி மாவட்டத்தில் 1.3.1970 ம் திகதியிலிருந்து நியமித்துள்ளார்.

ஆர். ரி. ரத்னதுங்க,
மேலதிக நிரந்தரச்செயலாளர்,
கமத்தொழில் காணி அமைச்சு.

கொழும்பு—1,
1970 ம் ஆண்டு ஒகஸ்ட் மீ 22 ம் வ.

9-632/2

---

*1970 இன் இல. 310*

**காணி அபிவிருத்திச் சட்டப்பிரமாணம்**
**(320 ன் கீழ் அறிவித்தல்)**

காணி அபிவிருத்திச்சட்டப் பிரமாணம் 6(1)ம் பிரிவின் கீழ் கௌரவ கமத்தொழில், காணி அமைச்சர் திரு. எப். எச். ஏ. பி. சில்வா, தற்காலிக காரியாதிகாரி அவர்களை அவருடைய கடமைகளுடன் மேலதிகமாக காணி உத்தியோகத்தராக இரத்தினபுரி மாவட்டத்தில் 17.1.1970 ம் திகதியிலிருந்து நியமித்துள்ளார்.

ஆர். ரி. ரத்னதுங்க,
மேலதிக நிரந்தரச்செயலாளர்,
கமத்தொழில் காணி அமைச்சு.

கொழும்பு—1,
1970 ம் ஆண்டு ஒகஸ்ட் மீ 22 ந் வ.

9-632/3

## அரசாங்க அறிவித்தல்கள்

என் : டி.39/பீ/சீசுஆர்

1934 ஆம் ஆண்டு, சனவரி மாதம் 26 ஆம் திகதிய 8,029 ஆம் என் கொண்ட இலங்கை அரசாங்க கசெற் பத்திரிகையிற் பிரசுரிக்கப் பட்ட ஒழுங்குவிதிகளின் பிரகாரம், தரைப்படையின் தொண்டர் படையின் பின்வரும் ஆளணியினர்க்கு வினைத்திறமை (இலங்கை) பதக்கம் அத்துடன்/அல்லது உலோகப் பட்டிகள் ஆகியவற்றை வழங்குதலில் அதி உத்தமராம் மகாதேசாதிபதி அவர்கள் களி கூர்ந்துள்ளார் :

வினைத்திறமைப் பதக்கம் (இலங்கை)

1164 தற்காலிக சார்ஜன்ட் புலத்சிங்கள, தயாநந்த ரஞ்சித், சி. ஏ.எம்.சி.(தொ.)

1202 தற்காலிக சார்ஜன்ட் களுபகன, மஹத்துன் ஏக்கநாயக்க, சி.ஏ.எம்.சி.(தொ.)

1-வது உலோகப் பட்டிகள்

1202 தற்காலிக சார்ஜன்ட் களுபகன, மஹந்துன் ஏக்கநாயக்க, சி.ஏ.எம்.சி. (தொ.)

அதி உத்தமரின் ஆணைப்படி,

ஏ. ஆர். ரத்னவேல்,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970, செத்தெம்பர் 1.

9-617

---

எல். டி. — பி 7/63

### 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டம்

6 ஏ ஆம் பிரிவின் கீழான கட்டளை

1968 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட படியான, 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத் தின் 6 ஏ ஆம் பிரிவின்படி எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு நிதி அமைச்சர் நானுயக்கார பத்திரகே மாட்டின் பெரேரா ஆகிய நான், மேற் குறிக்கப்பட்டுள்ள பிரிவின் (2) உப பிரிவின் முன் னேற்பாடுகள், இதற்குள்ள அட்டவணையின் 11 ஆம் நிரலில் ஒத்திசை வான குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து பயன்படுத்தும் வண்ணம், இதற்குள்ள அட்டவணையின் 1 ஆம் நிரலில் குறிப்பிடப்பட் டுள்ள ஒவ்வொரு பெயருக்கும் பொருத்தப்பட வேண்டியது என இக்கட்ட ளையின் மூலம் அறிவிக்கின்றேன்.

என். எம். பெரேரா,
நிதியமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 1 ந் வ.

அட்டவணை

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. மகாவலி கங்கை அபிவிருத்தித் திட்டத்திற்காக அறிவுரைகோரும் சேவைகளை வழங்குவதற் காக, 1969 ஆகஸ்ட் 26 ஆம் திகதியில் இலங்கை அரசாங்கத்துடன் மேற்கொள்ளப் பட்ட உடன்படிக்கை சம்பந்தமாக அமெரிக்க ஐக்கிய நாட்டின் என்ஜினியரிங் கன்சல்ட்டே சன் இன்கோப்பரேஷன் கொம்பனி | 26 ஆகஸ்ட் 1969 |
| 2. மகாவலி கங்கை அபிவிருத்தித் திட்டம்—பொல்கொலை திசை திருப்பும் அணை, குகை, குகைக்குள் நீர் செல்லும் வழியும், மின்சார இயந்திரத்தை கட்டுவதற்காக இலங்கை அர சாங்கத்தினுடன் மேற்கொள்ளப்பட்ட உடன் படிக்கை சம்பந்தமாக யுகோஸ்லேவியாவின் இன்ஜிரா கம்பெனி .. .. | 12 ஏப்பிரல் 1970 |

9-536

---

இல. இடி 30/036 (II)

இலங்கை வங்கிப் பணிப்பாளர் பதவி

1961 இன் 65 ஆம் இல. நிதிச் சட்டத்தின் 24 (2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் மதிப்புக்குரிய நிதி அமைச்சர் திரு. கே. சின்யா அவர்களை இலங்கை வங்கிப் பணிப்பாளர் ஒருவராக 1970, ஓகத்து மாதம் 21 ஆந் தேதியிலிருந்து நியமித்துள்ளார்.

மேற்கூறிய சட்டத்தின் 8 (எவ்) பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் மதிப்புக்குரிய நிதி அமைச்சர் அன்னுரைச் சொல்லப்பட்ட வங்கி யின் பணிப்பாளர் சபைத் தலைவராகவும் 1970.8.21 ஆந் தேதியி லிருந்து நியமித்துள்ளார்.

எச். ஆர். த சொய்சா,
நிதி அமைச்சின் நிரந்தரச்
செயலாளருக்காக.

1970, ஓகத்து மாதம் 30 ஆந் தேதி.

9-582

---

### நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

பாணந்துறை நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் நொத்தாரிசுவாகக் கடமை பார்க்க அனுமதி பெற்றுள்ள மயிகல் இரசிங்க அவர்கள், மேற்படி நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் சிங்கள பாஷையிலும் நொத்தாரிசுவாகக் கடமை பார்ப்பதற்குக் கௌரவ பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

9-558

---

### நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

கொழும்பு நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் நொத்தாரிசுவாகக் கடமை பார்க்க அனுமதி பெற்றுள்ள டயஸ் சமரகோன் அவர்கள், மேற்படி நீதிபரிபாலன ஆதிக்கத் துக்குள் சிங்கள பாஷையிலும் நொத்தாரிசுவாகக் கடமை பார்ப் பதற்குக் கௌரவ பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

9-555

---

### நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

சிலாபம் நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் நொத்தாரிசுவாகக் கடமைபார்க்க அனுமதி பெற்றுள்ள கச்சகடுகே கொட்பிரே ஜோசப் பர்னாந்து அவர்கள், மேற்படி நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் சிங்கள பாஷையிலும் நொத்தாரிசுவாகக் கடமை பார்ப்பதற்குக் கௌரவ பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் அனுமதியளிக்கப் பட்டுள்ளது.

9-557

---

### நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

மட்டக்களப்பு நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷை யில் நொத்தாரிசுவாகக் கடமை பார்க்க அனுமதி பெற்றுள்ள உத்மா லெவ்வை மொகமட் மொஹதீன் அவர்கள், மேற்படி நீதி பரிபாலன ஆதிக்கத்துக்குள் தமிழ் பாஷையிலும் நொத்தாரிசு வாகக் கடமை பார்ப்பதற்குக் கௌரவ பொது நிருவாக, உள்ளூ ராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் அனுமதியளிக்கப் பட்டுள்ளது.

9-553

---

### நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

கொழும்பு நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் நொத்தாரிசுவாகக் கடமை பார்க்க அனுமதி பெற்றுள்ள ஓவிட்டலகே சோமதாச பெரேரா அவர்கள், மேற்படி நீதி பரிபாலன ஆதிக்கத்துக்குள் சிங்கள பாஷையிலும் நொத்தாரிசு வாகக் கடமை பார்ப்பதற்குக் கௌரவ பொது நிருவாக, உள்ளூ ராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் அனுமதியளிக்கப் பட்டுள்ளது.

இல. 543. இ/141/டி/(பகுதி VII)

இதனகத்துள்ள பட்டோலையின் I ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள பதவிகள் ஒவ்வொன்றையும், அப்பட்டோலையின் II ஆம் பந்தியில் நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ள திணைக்களத்தில் வகிக்கும் ஒவ்வொருவரும் அத்தகைய பதவிக்கு அவர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஓய்வூதியத்திற்குத் தகவுடையவராவாரென ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புக்களின் 2 ஆம் பிரிவின் பிரகாரமும் சொல்லப்பட்ட பிரமாணக் குறிப்புக்களின் ஏற்பாடுகளுக் கமையவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பி. மகாதேவா,
பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சின்
நிரந்தரச் செயலாளர்.

பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
கொழும்பு 7.
1970 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 9 ந் உ.

பட்டோலை

| பத்தி I | பத்தி II |
|---|---|
| விற்பனை முகாமையாளர்—(1970.4.1 ஆந் தேதி முதல் திரு. ஐ. எம். ஹறூன் அவர்கள் வகிக்கும் மட்டும்) .. | கிராம அபிவிருத்தி, சிறு கைத்தொழில் திணைக்களம்—லக்சல விற்பனைத் தாபனங்கள் |
| உதவி விற்பனை முகாமையாளர்கள்—(1970.4.1 ஆந் தேதி முதல் திருவாளர்கள் ஆர். எல். டி. கே. விஜேதுங்க, சி. பி. தனபால, திருவாட்டிகள், டி. எம். தர்மதிலக, கே. பி. விஜேசிங்க, கே. எம். ஆர் பர்ணாந்து, பி. ஜயனி வெலிசர, கே. இரந்தேனியா, எல். பி. தென்னக்கோன்; எஸ். விஜேநாயக்க ஜீ. வெங்கப்புலி ஆகியோர் வகிக்கும் மட்டும்) | |
| உதவிப் பண்டசாலைக் காப்பாளர்கள்—(1970.4.1 ஆந் தேதி முதல் திருவாளர்கள் எச். எச். முனசிங்க யூ. டி. சிறிசோம, கே. ஜீ. பெரேரா ஆகியோர் வகிக்கும் மட்டும்) .. | கிராம அபிவிருத்தி, சிறு கைத்தொழில் திணைக்களம்—லக்சல விற்பனைத் தாபனங்கள் |
| தொலைபேசி இயக்குநர்—(திரு. சீலதாச லியனகெதர அவர்கள் வகிக்கும் மட்டும்) | |
| கப்பற் சரக்கேற்ற மேற்பார்வையாளர்—(திரு. எவ். டி. எச். விஜேகோன் அவர்கள்] .. | வியாபாரப் பொருட்கொள்வனவு திணைக்களம் |
| விரிவுரையாளர்கள் (2 பதவிகள்)—கோள் நிலை இயக்கங்களைக் காட்டும் பொறியகம் .. | கல்வி அமைச்சு. |

9–758

---

### நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

இரத்தினபுரி நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் நொத்தாரிசுவாகக் கடமை பார்க்க அனுமதி பெற்றுள்ள செல்வி இந்திரா பிரியதர்சனி ஆசீர்வாதம் மேற்படி நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் சிங்கள பாஷையிலும் நொத்தாரிசுவாகக் கடமை பார்ப்பதற்குக் கௌரவ பொது நிருவாக, உள்ளூராட்சி, உள் நாட்டு, விவகார அமைச்சரவர்களால் அனுமதியளிக்கப்பட்டுள் ளது

9-556

---

### நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

பருத்தித்துறை நீதிபரிபான ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் நொத்தாரிசுவாகக் கடமை பார்க்க அனுமதி பெற்றுள்ள அழுவாபிள்ளை நடராஜசுந்தரம் ராமச்சத்திரன் அவர்கள் மேற்படி நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் தமிழ் பாஷையிலும் நொத்தாரிசவாகக் கடமை பார்ப்பதற்குக் கௌரவ பொது நிருவாக, உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

9-635

---

### நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

பாணந்துறை நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் நொத்தாரிசுவாகக் கடமை பார்க்க அனுமதி பெற்றுள்ள நெவில் ஹென்றி பர்ணாந்து அவர்கள், மேற்படி நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் சிங்கள பாஷையிலும் நொத்தாரிசுவாகக் கடமை பார்ப்பதற்குக் கௌரவ பொது நிருவாக, உள்ளூராட்சி. உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

9-634

---

## 1957 ம் ஆண்டின் 49 வது இலக்க கைத்தொழில் கூட்டுத்தாபனங்களின் சட்டம்

1957 ம் ஆண்டின் 49 வது இலக்க கைத்தொழில் கூட்டுத்தாபனங்களின் சட்டத்தின் 12, 13 ம் பிரிவுகளின் கீழ், கௌரவ விவசாய, காணி அமைச்சர், திரு. ஒல்கொட் குணசேகரா அவர்களை இலங்கை உரயாக்கப் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஒருவராக 21.8.1970 தொடக்கம் மூன்று வருடகாலத்திற்கு நியமித்துள்ளார் என்பது இத்தால் பொது மக்களுக்கு தெரியப்படுத்தப்படுகின்றது.

ஏ. ரீ. எம். சில்வா,
நிரந்தரச் செயலாளர்,
விவசாய, காணி அமைச்சு.

விவசாய காணி அமைச்சு,
வொக்சோல் வீதி,
கொழும்பு 2,
1970 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 6 ந் உ.

9–650

---

### 1954 ம் ஆண்டின் 37 ம் இலக்க தேசிய வீடமைப்பு அதிகாரச் சட்டம்

#### 49 ம் பிரிவின் கீழான சான்றிதழ்

1954 ம் ஆண்டின் 37 ம் இலக்க தேசிய வீடமைப்பு அதிகாரச் சட்டத்தின் 49 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின்படி வீடமைப்பு நிர்மாண அமைச்சர், பீட்டர் ஜெரால்ட் பத்தோலோமியுஸ் கெனமன் ஆகிய நான், மேற்கூறப்பட்ட அதிகாரச் சட்டத்தின் 2 ம் பிரிவின் அடிப்படையில் வீடமைக்கும் நோக்கமாக இத்துடன் இணைக்கப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணி அரசாங்கத்தினாற் சுவீகரிக்கப்பட வேண்டும் என இதனால் அத்தாட்சி படுத்துகிறேன்.

பீ. ஜீ. பீ. கெனமன்,
வீடமைப்பு நிர்மாண அமைச்சர்.

1970, யூலை, 29.
கொழும்பு.

#### அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பிரிவு வயாவிளானில் அமைந்துள்ளதும் 5 பரப்பு குளி விஸ்தீரணமுள்ளதும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே. சின்னப்புவால் தயாரிக்கப்பட்ட 17.10.1964 திகதிய 154 ம் இலக்க நில அளவைப் படத்தில் விபரிக்கப்பட்டுள்ளதும் பின்வரும் எல்லைகளையுடையதுமான "களகாலை" எனப்படும் காணி.

வடக்கு : கந்தசாமியின் மனைவி தவமணிக்கும் ஏனையோருக்கும் உரிய ஆதனம்.

கிழக்கு : கணபதிப்பிள்ளையின் மனைவி, மங்கையர்க்கரசிக்குரிய ஆதனம்.

தெற்கு : ஏ. சிவகுருவுக்கும் உரிய ஆதனம்.

மேற்கு : வன்னியசிங்கத்தின் மனைவி ஆச்சிமுத்துவுக்குரிய ஆதனம்.

9-562

---

### சம்பளச்சபைக் கட்டளைச் சட்டம்

#### அறிவித்தல்

நெற்குத்துத் தொழிற் சம்பளச் சபையானது, (136 ம் அத்தியாயமாகிய) சம்பளச்சபைக் கட்டளைச் சட்டத்தின் 20 ம், 24 ம், 25 ம் பிரிவுகளுக்கமைசத் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்ட தீர்மானங்களைச் செய்ய உத்தேசிக்கிறதென அக்கட்டளைச் சட்டத்தின் 28 ம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இத்தால் அறிவிக்கின்றது.

உத்தேசித்துள்ள தீர்மானங்களுக்கு ஆட்சேபனைகள் 1970 ம் ஆண்டு ஒக்றோபர் மாதம் 8 ந் தேதியன்று பகல் 12 மணிவரைக்கும் சபையின் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனையொவ்வொன்றும் அவ்வண்ணம் ஆட்சேபித்தற்கான நியாயங்களைக் காட்டும் கூற்றொன்றைக் கொண்டதாய் எழுத்திற் தெரிவிக்கப்படவேண்டும்.

டப்ளியூ. எல். பீ. டீ. மெல்,
நெற்குத்துத் தொழிற் சம்பளச
சபைத் தலைவர்.

கொழும்பு, 10.9.1970.

அட்டவணை

I ம் பாகம்

சம்பளம் கொடுக்கப்படவேண்டிய இடைவேளைகள் (23 (1) ம் பிரிவு)

1. சம்பளம் வாராவாரம், வாரம் முடிந்த 3 நாட்களுக்குள் கொடுக்கப்படுதல் வேண்டும்.

சாதாரண வேலைநாள் என்பதன் சொற்பொருள் விளக்கம் (24 ம் பிரிவு)

2. (சாப்பாட்டுக்கு ஒரு மணி நேரமுட்பட்ட) ஒரு சாதாரண வேலைநாள் கொண்ட மணிநேரமென்பது ஒன்பதாகும்.

II ம் பாகம்

சம்பளம்

நேரவேலைக்குரிய கிழெல்லைச் சம்பள வீதங்கள், ஆண் தொழிலாளருக்கு நாளொன்றுக்கு ரூ. 4/- உம், பெண் தொழிலாளருக்கு நாளொன்றுக்கு ரூ. 3/- உமாகும்.

III ம் பாகம்

மேலதிகநேர வீதங்கள்

சாதாரண வேலை நாளுக்கு மேலதிகமாகச் செய்யும் ஒவ்வொரு மணிநேர வேலைக்கும் கொடுபடவேண்டிய கிழெல்லை மேலதிகநேரவீதம், (நேரவேலைக்குரிய கிழெல்லை நாளாந்தச் சம்பள வீதத்தை 8 ஆற் பிரிக்க வரும்) கிழெல்லை மணிநேரச் சம்பள வீதத்தை 50 வீதம் அதிகரிக்க வருவதாகும்.

IV ம் பாகம்

வாராந்த விடுமுறைகள் (24 ம் பிரிவு)

வேலைக்கமர்த்துபவரொவ்வொருவரும தம்மிடம் வேலை பார்க்கும் தொழிலாளரொவ்வொருவருக்கும் எவ்வாரத்திலும் போயா தினத்தை வாராந்த விடுமுறையாகக் கொடுத்தல் வேண்டும். எவ்வாரத்திலும் போயா தினமில்லாதவிடத்து, அவர் அவ்வாரத்தில் ஒரு நாளை வாராந்த விடுமுறையாகக் கொடுத்தல் வேண்டும், எனினும், வேலைக்கமர்த்துபவரொருவர், பின்வரும் நிபந்தனைகளுக்கமைய, எத்தொழிலாளருக்கும் அவ்வாராந்த விடுமுறையில் வேலை கொடுப்பதினின்றும் தடுக்கப்படலாகாது :—

(அ) அத்தகைய வாராந்த விடுமுறைக்கு நேரடுத்துவரும் ஆறு நாட்களுக்குள் ஒரு நாள் அத் தொழிலாளருக்கு விடுமுறையாகக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) அத்தொழிலாளர் அவ்வாராந்த விடுமுறையிற் செய்யும் வேலைக்கு சாதாரண வேலைநாளுக்குரிய கிழெல்லைச் சம்பள வீதத்தின் 50 வீதம் அதிகப்படுத்தி வேதனமாகக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(இ) 1 ம் பாகத்தின் 2 ம் பந்தியின் கீழ் ஒரு சாதாரண வேலை நாள் கொண்ட மணி நேரத்திற்கு மேலதிகமாக ஒரு வாராந்த விடுமுறையிற் செய்யும் ஒவ்வொரு மணிநேர வேலைக்கும் உரிய கிழெல்லை மேலதிகநேரச் சம்பள வீதம், (சாதாரண கிழெல்லை நாளாந்த வீதத்தை 8 ஆற் பிரிக்கவரும்) கிழெல்லை மணி நேரச் சம்பளவீதத்தின் இரு மடங்குக்குச் சமமான தொகையாக இருத்தல் வேண்டும்.

(ஈ) வாராந்த விடுமுறையிற் செய்யும் வேலைக்கு, தொழிலாளரொருவருக்குரிய வேதனம் அவ்வாரத்தில் அவருக்குரிய சம்பளத்துடன் சேர்த்துக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

எனினும், (136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 25 ம் பிரிவின் கீழ் பிரகடனஞ் செய்யப்பட்ட அரசாங்க விடுமுறையொன்றில் வாராந்த விடுமுறையொன்று வரும்பொழுது, அரசாங்க விடுமுறை அந்நாளிலும், வாராந்த விடுமுறை அவ்வரசாங்க விடுமுறைக்கு நேரடுத்துவரும் நாளிலும் கொடுக்கப்படுதல் வேண்டும்.

V ம் பாகம்

ஆண்டு விடுமுறை (5 ம் பிரிவு)

(இதனடுத்துப் பின்னர் "தகுதிப்படுத்தும் ஆண்டு" எனவழையும்) எவ்வாண்டிலும் தொழிலாளரொருவர் ஒரே வேலைக்கமர்த்துபவரின் கீழ் தொடர்ச்சியாக வேலையிலிருந்து இதனடியில் 1 ம் பத்தியிற் குறிக்கப்பட்ட தொகை நாட்களுக்கு வேலை செய்திருப்பின், நேரடுத்து வரும் ஆண்டில் (இதனடியில் II ம் பத்தியில் அதற்கு நேரே குறிக்கப்பட்ட) தொகை நாட்களுக்கு அவருக்கு விடுமுறை கொடுக்கப்படுதல் வேண்டும்.

| I ம் பத்தி நாட்களின் தொகை | | II ம் பத்தி விடுமுறைகளின் தொகை |
|---|---|---|
| 36 க்கு உட்படாததும் 71 க்கு மேற்படாததும் | .. | 2 |
| 72 க்கு உட்படாததும் 107 க்கு மேற்படாததும் | .. | 4 |
| 108 க்கு உட்படாததும் 143 க்கு மேற்படாததும் | .. | 6 |
| 144 க்கு உட்படாததும் 179 க்கு மேற்படாததும் | .. | 8 |
| 180 நாட்கள் .. .. | .. | 10 |

தொழிலாளரொருவர் 180 நாட்களுக்கு அதிகமாக வேலை செய்திருப்பின், மேற்கூறிய 10 விடுமுறைகளுடன் சேர்த்து, 180 நாட்களுக்கு மேலதிகமாக வேலைசெய்த ஒவ்வொரு பூரண 6 நாட்களுக்கும் ஒரு விடுமுறை வீதம் கணிக்கப்பட்டு அவருக்கு விடுமுறைகள் கொடுக்கப்படுதல் வேண்டும். எனினும், 18 நாட்களுக்கு மேலதிகமாக அத்தகைய விடுமுறையெதனையும் வேலைக்கமர்த்துபவரெவரும் கொடுக்கவேண்டுமென்னும் கடப்பாடில்லை.

2. தொழிலாளரொருவர் எவ்வாண்டிலும் 7 அல்லது அதற்கு மேற்பட்ட விடுமுறைகளுக்கு உரித்துடையராயின், அந்த 7 விடுமுறைகளும் அவருக்குத் தொடர்ச்சியான நாட்களில் கொடுக்கப்படுதல் வேண்டும். அவரும் அவற்றைத் தொடர்ச்சியான நாட்களில் எடுத்தல் வேண்டும்.

3. 2 ம் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய, தொழிலாளரொருவருக்கு, அவரும் அவரது வேலைக்கமர்த்துபவரும் தம்மிடையே பரஸ்பரமாக ஒத்துக்கொள்ளும் நாளில் அல்லது நாட்களில் விடுமுறை அல்லது விடுமுறைகள் கொடுக்கப்படலாம்.

4. தொழிலாளரொருவர் தமது வேலையிலிருந்து தாமாக விலக உத்தேசிப்பின் அல்லது நிறுத்தப்பட அல்லது விலக்கப்படவிருப்பின், அத்தொழிலாளர் அவ்வண்ணம் விலகுதற்கு, நிறுத்தப்படுதற்கு அல்லது நீக்கப்படுதற்கு நேரே முந்திய காலத்தில்—

(அ) முந்திய ஆண்டில் அவருக்கு உரித்துள்ளதும் அவர் ஏற்கனவே எடுக்காததுமான விடுமுறையொவ்வொன்றையும்,

(ஆ) 1 ம் பந்தியிற் குறிக்கப்பட்ட வேலை கொடுத்தலும் வேலையும் தொடர்பாய ஏற்பாடுகளுக்கமைந்து அத்தொழிலாளர் நடப்பு ஆண்டில் ஒழுகியிருப்பின், மற்றப்படி நேரடுத்துவரும் ஆண்டில் அவருக்கு உரித்துள்ளதாயிருக்கக்கூடிய விடுமுறையொவ்வொன்றையும்,

எடுத்தற்கு அத்தொழிலாளர் உரித்துடையராவார், அன்றியும், அவற்றை அவ்வாறு அவர் எடுத்தல் வேண்டும். எனினும், அத்தகைய தொழிலாளர் எவ்வாண்டிலும் எடுக்கக்கூடிய விடுமுறைகளின் தொகை 18 க்கு மேற்படலாகாது.

5. இப்பாகத்திற் குறிக்கப்பட்ட அத்தகைய விடுமுறையொவ்வொன்றுக்கும் கொடுபட வேண்டிய வேதனமானது கிழெல்லை நாளாந்த வீதத்திற்குச் சமமான தொகையாகும்.

6. ஒரு தொழிலாளருக்கு அவரது விடுமுறைக்கு அல்லது விடுமுறைகளுக்கு உரிய வேதனம் அவ்விடுமுறைக்கு அல்லது விடுமுறைகளுக்கு முன்னர் கொடுக்கப்படுதல் வேண்டும் ; ஆனால், அவ்விடுமுறைக்கு அல்லது அவ்விடுமுறைகளுக்கு 10 நாட்களுக்கு மேற்பட முன்னதாகக் கொடுக்கப்படலாகாது.

7. 1 ம் பந்தியின் நோக்கத்திற்காக, "தொழிலாளரொருவர் வேலை செய்த நாட்கள்" என்பது பின்வருவனவற்றை உட்படுத்தும் :—

(i) வேலைக்கமர்த்துபவர் 25 ம் பிரிவுக்கமைய தொழிலாளருக்குக் கொடுத்த விடுமுறையொவ்வொன்றும்,

(ii) சம்பளச் சபைக் கட்டளைச் சட்டமல்லாத எழுத்துமூலமான எச்சட்டத்தின் ஏற்பாடுகளின்படியாயினும் அவற்றின் கீழாயினும் தொழிலாளருக்கு உரித்துள்ள விடுமுறையொவ்வொன்றும் அல்லது வேலைக்கு வராதிருக்க உரித்துள்ள நாளொவ்வொன்றும்,

(iii) வேலைக்கமர்த்துபவர் அனுமதித்துள்ள எந்நியாயம் குறித்தும் வேலைக்கு வராத நாளொவ்வொன்றும்,

(iv) அவரது வேலை காரணமாகவும் அவர் வேலை செய்து கொண்டிருக்கும் பொழுதும் அத்தொழிலாளருக்கு நேர்ந்த ஒரு விபத்தின் விளைவான எக்காயத்தின் பொருட்டும் வேலைக்குவராத நாளொவ்வொன்றும், அத்தகைய காயம்பற்றி வேலைக்கமர்த்துபவருக்கு அறிவித்திருந்தால் மாத்திரமே இது பொருந்தும்.

(v) (117 ம் அத்தியாயமாகிய) தொழிலாளர் நட்ட ஈட்டுக் கட்டளைச் சட்டத்தின் iii ம் அட்டவணையிற் குறிக்கப்பட்ட விஷப்பருவின் அல்லது தொழிலின் பயனாக ஏற்பட்ட யாதாயினும் நோய் காரணமாக வேலைக்கு வராத நாளொவ்வொன்றும்,

(vi) வேலைக்கமர்த்துபவர் தொழிலாளருக்கு வேலை கொடுக்கத் தவறும் நாளொவ்வொன்றும்,

(vii) ஓராண்டில் 30 நாட்களுக்கு மேற்படாத சட்டவிரோதமற்ற வேலை நிறுத்தம் அல்லது கதவடைப்பு காரணமாக வேலைக்கு வராத நாளொவ்வொன்றும்,

ஆனால், 24 ம் பிரிவின் கீழ் வாராந்த விடுமுறையாக நியமிக்கப்பட்ட நாளை உட்படுத்தாது.

அரசாங்க விடுமுறைகள் (25 ம் பிரிவு)

7. (அ) வேலைக்கமர்த்துபவரொவ்வொருவரும் தம்மிடம் வேலை பார்க்கும் தொழிலாளர் யாவருக்கும் 1965 ம் ஆண்டின் 17 ம் இல. விடுமுறை அதிகாரச் சட்டத்தின் பொருளுக்கமைய, பின்வரும் அரசாங்க விடுமுறைகளை வேதனத்துடன் விடுமுறைகளாக அனுமதித்தல் வேண்டும் :—

1. தேசிய வீரர் தினம் (ஜனவரி 1 ந் தேதி),
2. தமிழ்த் தைப்பொங்கல் தினம்,
3. சுதந்திர நினைவு தினம் (பெப்பிரவரி 4 ந் தேதி),
4. சிங்கள, தமிழ்ப் புத்தாண்டு தினத்திற்கு நேரே முந்திய தினம்,
5. சிங்கள, தமிழ்ப் புத்தாண்டு தினம்,
6. மே தினம் (மே 1 ந் தேதி),
7. சிங்கள விசாக மாதத்தின் பூரணை தினத்திற்கு நேரடுத்துவரும் தினம்,
8. ஈத்-உல்-பித்ர் (இரம்ழான் பண்டிகை)
9. நத்தார் தினம்.

7. (ஆ) (அ) ம் உபபந்தியிற் குறிக்கப்பட்ட விடுமுறையொவ்வொன்றுக்கும் உரிய வேதனமானது, ஒரு சாதாரண வேலை நாளுக்குரிய கிழெல்லை நாளாந்தச் சம்பள வீதத்திற்குக் குறையாதிருத்தல் வேண்டும்.

8. எனினும், வேலைக்கமர்த்துபவரொருவர் பின்வரும் நிபந்தனைகளுக்கமைய, மேற்கூறிய அரசாங்க விடுமுறையெதிலும் எத்தொழிலாளருக்கும் வேலை கொடுக்கலாம் :—

(அ) அத்தகைய அரசாங்க விடுமுறைக்குப் பின் அடுத்துவரும் டிசெம்பர் மாதம் முப்பத்தோராம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் ஒரு நாள் ஒரு சாதாரண வேலைநாளுக்குரிய கிழெல்லை நாளாந்தச் சம்பள வீதத்திற்குக் குறையாத வீதத்தின்படி வேதனத்துடன் அத்தொழிலாளருக்கு விடுமுறையாகக் கொடுக்கப்படுதல் வேண்டும், அல்லது

(ஆ) அத்தகைய அரசாங்க விடுமுறையெதிலும் செய்யும் வேலைக்கு, அத்தொழிலாளருக்கு ஒரு சாதாரண வேலைநாள் கொண்ட மணி நேரத்திற் செய்யும் வேலைக்குக் கொடுபட வேண்டிய கிழெல்லை நாளாந்தச் சம்பள வீதத்தின் இருமடங்குக்குக் குறையாமலும், ஒரு சாதாரண வேலைநாள் கொண்ட மணிநேரத்திற்கு மேலதிகமாகச் செய்யும் வேலைக்கு (கிழெல்லை நாளாந்த வீதத்தை 8 ஆல் பிரிக்க வரும்) சாதாரண மணிநேர வீதத்தின் மும்மடங்குக்குக் குறையாத வீதத்தின்படியும், அம்மணிநேரத்தின் பகுதியெதிலும் செய்யும் வேலைக்கு விகிதாசாரப்படியும் வேதனம் கொடுக்கப்படுதல் வேண்டும்.

9–718

---

## சம்பளச் சபைக் கட்டளைச் சட்டம்

### அறிவித்தல்

(136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 30 ம் பிரிவின்படி, தனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு தெங்குப் பொருளுற்பத்தித் தொழிற் சம்பளச் சபை, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டவாறு அவ்வட்டவணையிற் குறிக்கப்பட்ட சபையின் தீர்மானங்களை மாற்ற உத்தேசிக்கிறதென்று மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 28 ம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறிய உத்தேசத்திற்கு ஆட்சேபனைகள் 1970 ம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 30 ந் தேதி பகல் 12 மணிவரைக்கும் இச்சபையின் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனையொவ்வொன்றும் அவ்வண்ணம் ஆட்சேபித்தற்கான நியாயங்களைக் காட்டும் கூற்றொன்றினைக் கொண்டதாய் எழுத்தில் தெரிவிக்கப்பட வேண்டும்.

டபிள்யூ. எல். பீ. டீ. மெல்,
தலைவர்,
தெங்குப் பொருளுற்பத்தித் தொழிற்
சம்பளச் சபை.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஓகஸ்ட் மீ 29 ந் உ.

### அட்டவணை

தெங்குப் பொருளுற்பத்தித் தொழிற் சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, 1949 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ந் தேதியன்று வெளிவந்த 9,971ம் இலக்க அசாதாரண வர்த்தமானியிற் பிரசுரமான அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டவையும், 1964 ம் ஆண்டு மே மாதம் 19 ந் தேதியன்று வெளிவந்த 14,039 ம் இலக்க அசாதாரண வர்த்தமானியிற் பிரசுரமான அறிவித்தலிற் குறிக்கப்பட்டவாறு இறுதியாக மாற்றப்பட்டவையுமான தீர்மானங்கள், அவ்வட்டவணையில் " அரசாங்க விடுமுறைகள் (25 ம் பிரிவு) " என்ற தலைப்பின் கீழ் 8 ம் பந்தியின் (அ) ம் உப பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய உப பந்தியை இடுவதன் மூலம் மேலும் மாற்றப்படுதல் வேண்டும் :—

" அரசாங்க விடுமுறைகள் (25 ம் பிரிவு)

8 (அ) இப் பந்தியினதும் 9 ம் பந்தியினதும் ஏற்பாடுகளுக்கமைய, வேலைக்கமர்த்துபவரொவ்வொருவரும் தம்மிடம் வேலை பார்க்கும் தொழிலாளரொவ்வொருவருக்கும் 1965 ம் ஆண்டின் 17 ம் இலக்க விடுமுறை அதிகாரச் சட்டத்தின் பொருளுக்கமைய, பின்வரும் அரசாங்க விடுமுறையொவ்வொன்றையும், அத்தகைய விடுமுறையொவ்வொன்றுக்கும் நேரே முந்திய 30 நாட்காலத்தில் 7 நாட்களுக்குக் குறையாமல் அத்தொழிலாளர் தம்மிடம் வேலை பார்த்திருப்பின், வேதனத்துடன் கொடுத்தல் வேண்டும் :—

(1) தேசிய வீரர் தினம் (சனவரி 1) ;
(2) தமிழ்த் தைப்பொங்கல் தினம் ;
(3) சுதந்திர நினைவு தினம் (பெப்ருவரி 4) ;
(4) சிங்கள, தமிழ்ப் புத்தாண்டு தினத்திற்கு நேரே முந்திய தினம் ;
(5) சிங்கள, தமிழ்ப் புத்தாண்டு தினம் ;
(6) மே தினம் (மே 1) ;
(7) சிங்கள விசாக மாதத்தின் பூரணை தினத்திற்கு நேரடுத்து வரும் தினம் ;
(8) மீலாதுன் நபி (நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறந்த திருநாள்) ;
(9) நத்தார் தினம்.

இவ்வுப பந்தியிற் குறிக்கப்பட்ட ஏழு நாட்களைக் கணிக்கும் நோக்கத்திற்காக, தொழிலாளரொருவர் பின்வரும் நாட்களில் வேலை செய்ததாகக் கருதப்படுதல் வேண்டும் :—

(1) கையளித்திறகெடுத்துக் கொள்ளப்படும் எவ்வாறாயினும் (136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 25 ம் பிரிவிற்கமைய தொழிலாளருக்கு வேலைக்கமர்த்துபவர் அனுமதிக்கும் விடுமுறையொவ்வொன்றும் ;
(2) வேலைக்கமர்த்துபவர் அங்கீகரித்துள்ள காரணங்களை நிமித்தமாயினும் வேலைக்கு வராதிருக்கும் நாளொவ்வொன்றும் ;
(3) தொழிலாளரின் வேலை காரணமாகவும், அவரது வேலையின் போதும் நேரும் விபத்தொன்றினால் அவருக்கேற்படும் யாதாயினும் காயத்தின் காரணமாக வேலைக்கு வராதிருக்கும் நாளொவ்வொன்றும் ;
(4) (139 ம் அத்தியாயமாகிய) தொழிலாளர் நட்ட ஈட்டுக் கட்டளைச் சட்டத்தின் III ம் அட்டவணையிற் குறிக்கப்பட்ட தொழிலின் விளைவான யாதாயினும் நோய் காரணமாக வேலைக்கு வராதிருக்கும் நாளொவ்வொன்றும் ;
(5) வேலைக்கமர்த்துபவர் தொழிலாளருக்கு வேலை கொடுக்கத்தவறும் நாளொவ்வொன்றும் ;
(6) சட்டவிரோதமற்றதும், 30 நாட்களுக்கு மேற்படாததுமான வேலைநிறுத்தமொன்றின் அல்லது கதவடைப்பொன்றின் காரணமாக வேலைக்கு வராதிருக்கும் நாளொவ்வொன்றும் ;
(7) சம்பளச் சபைக் கட்டளைச் சட்டமல்லாத எழுத்திலான யாதாயினும் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி அல்லது அவ்வேற்பாடுகளுக்கமைய வேலைக்கு வராதிருந்ததற்குத் தொழிலாளருக்கு உரித்துள்ள நாளொவ்வொன்றும் ;

ஆனால், (136 ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 24 ம் பிரிவிற்கமைய வாராந்தர விடுமுறையாக நியமிக்கப்பட்ட நாளில் வேலை செய்ததாகக் கருதப்படலாகாது. "

9–724/1

---

எல். டி.–பி. 141/47

## சம்பளச் சபைக் கட்டளைச் சட்டம்

### அறிவித்தல்

(136–ம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 30–ம் பிரிவிற்கமையத் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு தெங்குப் பொருள் உற்பத்தித் தொழிற் சம்பளச் சபை, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டவாறு, அவ்வட்டவணையிற் குறிக்கப்பட்ட சபையின் தீர்மானங்களை மாற்ற உத்தேசிக்கிறதெனறு மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 28–ம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறிய உத்தேசத்திற்கு ஆட்சேபனைகள் 1970–ம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 30 ந் தேதி பகல் 12 மணிவரைக்கும் இச்சபையின் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அந்தவகைய ஆட்சேபனையொவ்வொன்றும் அவ்வண்ணம் ஆட்சேபித்தற்கான நியாயங்களைக் காட்டும் கூற்றொன்றைக் கொண்டதாய் எழுத்தில் தெரிவிக்கப்பட வேண்டும்.

டபிள்யூ. எல். பீ. டீ. மெல்,
தெங்குப்பொருள் உற்பத்தித் தொழிற்
சம்பளச்சபைத் தலைவர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஓகஸ்ட் மீ 29 ந் உ.

### அட்டவணை

தெங்குப்பொருள் உற்பத்தித் தொழிற் சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, 1949 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ந் தேதியன்று வெளிவந்த 9,971 ம் இல. அசாதாரண வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டவையும் 1964 ம் ஆண்டு மே மாதம் 19 ந் தேதியன்று வெளிவந்த 14,039 ம் இல. அசாதாரண வர்த்தமானியிற் பிரசுரமான அறிவித்தலிற் குறிக்கப்பட்டவாறு கடைசியாக மாற்றப்பட்டவையுமான தீர்மானங்கள், அவ்வட்டவணையின் II ம் பாகத்தில் "தற்பொழுது நடைமுறையில் உள்ளவையும் இக்கட்டளைச் சட்டத்தின் 6 ம் பிரிவுக்கமைந்த அறிவித்தலில் விவரிக்கப்பட்ட தெங்குப்பொருள் உற்பத்தித் தொழிலின் நடவடிக்கைகளிலுள்ள சில செய்கை முறைகளுக்கு பொருத்தமான குறைந்தவேலை 'குறிய நிமைகளைச் சம்பள வீதங்கள்" என்ற உபதலைப்பின் கீழ் அதன் (i) ம் விடயத்திற்குப் பதிலாக தேங்காய்த் துருவல் உற்பத்தி சம்பந்தமாகப் பின்வரும் புதிய விடயத்தை இடுவதன் மூலம் மேலும் மாற்றப்படுகின்றன :

செய்கைமுறை :

1. தேங்காய்த்துருவல் உற்பத்தி செய்வதில் :—

| | | ரூ. ச. |
|---|---|---|
| தேங்காய் உரித்தல் | 1000 தேங்காய்க்கு | .. 3.19 |
| சிரட்டை அகற்றல் (உரித்தல்) | 1000 தேங்காய்க்கு | .. 2.00 |
| மேற்றோல் அகற்றல் | 1000 தேங்காய்க்கு | .. 2.00 |
| தேங்காய்ப்பூவைக் கழுவுதலும் பிரித்தலும் | 1000 தேங்காய்க்கு | .. 1.20 |
| காயவைத்தல் | 1000 தேங்காய்க்கு | .. 1.60 |
| அரித்தலும் வகைப்படுத்தலும் | 1000 தேங்காய்க்கு | .. 1.06 |
| பெட்டிகளில் அடைத்தலும் விலாசமிடுதலும் | 120 முதல் 130 றாத்தல் கொண்ட பெட்டியொன்றுக்கு | .. 0.16 |

9–724/2

---

# அரசாங்க பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## காணிப் பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டம்

### 120 ம் அதிகாரத்தின் கீழ் அறிவித்தல்

கீழ்க்காணும் பட்டோலையில், 2 ம் நிரலில் விவரிக்கப்படும் காணிகள், 1 ம் நிரலில் காணப்படுவதும், பழுதடைந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமாக, 3 ம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக, காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டம் (120 ம் அதிகாரம்) 4 ம் பிரிவின் கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கின்றன என்று இத்தால் அறிவிக்கின்றேன.

1970 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20 ம் திகதி தொடக்கம் 1970 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 6 ம் திகதி வரைக்கும் வார நாட்களில் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரைக்கும், போயா தினத்திற்கு முன்நாள் காலை 10 மணி முதல் பகல் 12 மணி வரைக்கும் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு, தங்கல்லை காணிப்பதிவுக்காரர் அலுவலகத்தில் வைத்திருக்கப்படும்.

திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் சம்பந்தமாக அல்லது பதிவுகள் சம்பந்தமாக எவரேனும் ஆட்சேபனை தாக்கல் செய்யவோ, அல்லது தவறுக விடப்பட்டிருக்கும் விபரங்கள் அல்லது பதிவுகள் சேர்க்கப்படவேண்டுமென விரும்பினால், அவை சம்பந்தமான முறையீடுகள் அல்லது கோரிக்கைகள் செய்வோர், கீழே கையொப்பம் வைத்திருப்பவரின் பெயருக்கு எழுத்து மூலம் 1970 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 23 ம் திகதிக்குப் பிந்தாமல் பதிவுத் தபால் மூலம், பதிவு காரியகர்த்தர் அலுவலகத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் தகுந்த சாதனச் சான்றுகளுடன் அனுப்பப்படல் வேண்டும்.

#### பட்டோலை

| காணிப் பதிவேடு இருமடித்தாளின் விபரம் (1) | பாதிக்கப்பட்ட காணிகளின் விவரணம் (2) | உறுதிகளின் விபரங்கள் (3) |
|---|---|---|
| தங்கல்லை மாவட்ட காணிப் பதிவகத்தில் "எ" பகுதியில் 131 ம் தொகுதியில் 324 ம் இருமடித்தாள் | தென் மாகாணம், ஹம்பாந்தோட்டை மாவட்டம், மேற்கு கிருவா பத்துவில் கெட்டமான்ன என்னும் கிராமத்தில் 6 ஏக்கர் விசாலமுள்ள வேபொடவத்தையும், கந்தினிகேவத்தையும்<br>இதன் எல்லைகள் :—<br>கிழக்கு : ஜயல்கஸ் கொரடுவையும், மஹருப்பையும் ;<br>தெற்கு : பிம்பிறிகஹ கொறட்டுவவும் உஸ்வத்தையும் ;<br>மேற்கு : இந்திபிட்டென்ன ;<br>வடக்கு : பந்துறெகஹ கொறட்டுவையும் வெலிகம கெதறையும். | நொத்தாரிசு ஜே. பீ. பி. குணவர்தன 1913 ம் ஆண்டு ஜூலை மாதம் 27 ம் திகதி அத்தாட்சிப்படுத்திய 10731 ம் இலக்க உறுதி |
| தங்கல்லை மாவட்ட காணிப் பதிவகத்தில் "எ" பகுதியில் 131 ம் தொகுதியில் 325 ம் இருமடித்தாள் | தென் மாகாணம், ஹம்பாந்தோட்டை மாவட்டம், பானமுல்ல என்னும் கிராமத்தில் 7 பேலை நெல் விதைக்கும் விசாலமுள்ள கட்டன் டி. கே. மூலன<br>இதன் எல்லைகள் :—<br>வடக்கு : கொஸ்கஹஹேனையும் கோன்கஹ தெனியே இன்னியரவும்;<br>கிழக்கு : கோன்கஹ தெனியே இன்னியர ;<br>தெற்கு : கிராம சபை மார்க்கம் ;<br>மேற்கு : முத்தெட்டுவையும் கொட தெனியாவும். | நொத்தாரிசு டீ. கே. எஸ். குணவர்தன 1915 ம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ம் திகதி அத்தாட்சிப்படுத்திய 589 ம் இலக்க உறுதி |

பதிவுக் காரியகர்த்தர் காரியாலயம்,
கொழும்பு,
1970 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 30 ந் உ.

ஈ. பி. குமாரகே,
பதில் பதிவு காரியகர்த்தர்.

9–719

### விவாகங்கள் நிறைவேற்றுவைக்கும் பொருட்டுப் பதியப்பட்ட வணக்கத் தலத்தை ரத்துச் செய்தல்

விவாகப் பதிவுக் கட்டளைச் சட்டம் (112 ம் அத்தியாயம்) 12 ம் பிரிவின் கீழ், இலங்கை அரசாங்கத்தின் பதில் பதிவு காரியகர்த்தர் எட்வேர்ட் பெரேரா குமாரகே ஆகிய நான், எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவத்தைக் கொண்டு, கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தேவாலயம், கிறிஸ்தவர்களினால் வணங்கும் பொது இடமாகக் கருதப்படாமையால் இத்தேவாலயத்தில் விவாகங்கள் பதிவு செய்யும் பொருட்டு அளிக்கப்பட்ட அனுமதியை, இத்தால் ரத்துச் செய்ய வேண்டி ஏற்பட்டிருக்கிறது.

இலக்கம்.—945.

பதிவு செய்யப்பட்ட தினம்.—1965 ஐப்பசி 5.

விபரம்.—இலங்கை பென்ரிகொஸ்ரல் தேவாலய மண்டபம்.

இருக்கும் இடம்.—149, கொழும்பு ரோட், களுவெள்ள, காலி.

குரு அல்லது உரிமையாளர் அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளர்.—வண. தியாகதாஸ் பிரெட்றிக் போல்.

எந்தச் சமயத்தின் சார்பாக இத் தேவாலயக் கட்டிடம் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.—இலங்கை பென்ரிகொஸ்ரல் மிஸன்.

எ. பெ. குமாரகே,
பதில் பதிவு காரியகர்த்தர்.

பதிவு காரியகர்த்தர் அலுவலகம்,
கொழும்பு 1,
2.9.1970.

9-551

### இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதி

புகையிரதக் கடவை திருத்தங்கள்

அட்டன், கொட்டகல ஆகிய புகையிரத நிலையங்களுக்கும் இடையில் 111 மைல் 75 சங்கிலியில் என்னும் இடத்தில் இருக்கும் அரசாங்க கட்டுவேலை வேலைப்பகுதியில் 111 மைல் 75 சங்கிலியில் உள்ள புகையிரதக் கடவை திருத்துவதற்காக மேற்படி வீதி 28 ம் திகதி செப்டம்பர் மாதம் இரவு 10.00 மணி தொடக்கம் 29 ம் திகதி செப்டம்பர் மாதம் காலை 06.00 மணி வரையும் வாகனப் போக்குவரத்திற்கு பூராக மூடப்பட்டிருக்கும்.

ஜே. பீ. சேனாத்திரு,
இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதி
தலைமை அதிபருக்காக.

9-610

---

### வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பு, 1969/70

" லக்சல " — கொழும்பு

வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பிற்காக மேற்கூறப்பட்ட ஸ்தாபனம் 1970 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ந் திகதியிலிருந்து 1970 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 6 ந் திகதிவரையும் (இரு நாட்களும் உட்பட) மூடப்பட்டிருக்கும்.

சோமபால குணசிறி,
அதிபர்,
சிறு கைத்தொழில் திணைக்களம்.

சிறு கைத்தொழில் திணைக்களம்,
ஹோல்ஸ் கட்டடம்,
பிறிஸ்ரல் வீதி,
கொழும்பு.
1970 ம் ஆண்டு செப்டம்பர், மீ 11 ந் உ.

9-717

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

### அட்டவணை—1970

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| செத்தெம்பர் | .. | 4. 9.70 | வெள்ளி | .. | 28. 8.70 | வெள்ளி | .. | பி.ப. 3.30 |
| | | 11. 9.70 | வெள்ளி | .. | 4. 9.70 | வெள்ளி | .. | பி.ப. 3.30 |
| | | 18. 9.70 | வெள்ளி | .. | 11. 9.70 | வெள்ளி | .. | பி.ப. 3.30 |
| | | 25. 9.70 | வெள்ளி | .. | 18. 9.70 | வெள்ளி | .. | பி.ப. 3 30 |
| ஒற்றோபர் | .. | 2.10.70 | வெள்ளி | .. | 25. 9.70 | வெள்ளி | .. | பி.ப. 3.30 |
| | | 9.10.70 | வெள்ளி | .. | 2.10.70 | வெள்ளி | .. | பி.ப. 3.30 |
| | | 16.10.70 | வெள்ளி | .. | 9.10.70 | வெள்ளி | .. | பி.ப. 3.30 |
| | | 23.10.70 | வெள்ளி | .. | 16.10.70 | வெள்ளி | .. | பி.ப. 3.30 |
| | | 30.10.70 | வெள்ளி | .. | 23.10 70 | வெள்ளி | .. | பி.ப 3 30 |
| நவெம்பர் | .. | 5 11 70 | வியாழன் | .. | 30 10 70 | வெள்ளி | .. | பி.ப. 3.30 |
| | | 12.11.70 | வியாழன் | .. | 5.11.70 | வியாழன் | .. | ந.ப. 12.00 |
| | | 20.11.70 | வெள்ளி | .. | 12.11.70 | வியாழன் | .. | ந.ப. 12.00 |
| | | 27.11.70 | வெள்ளி | .. | 20.11.70 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| திசெம்பர் | .. | 4.12.70 | வெள்ளி | .. | 27.11.70 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 11.12.70 | வெள்ளி | .. | 4.12.70 | வெள்ளி | .. | ந.ப. 12.00 |
| | | 18.12 70 | வெள்ளி | .. | 10.12.70 | வியாழன் | .. | பி.ப. 3.30 |
| | | 24 12.70 | வியாழன் | .. | 17.12.70 | வியாழன் | .. | பி.ப. 3.30 |
| | | 31.12.70 | வியாழன் | .. | 24.12.70 | வியாழன் | .. | பி.ப. 3.30 |

அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,
கொழும்பு,
1970 ஆம் ஆண்டு யூன் மீ 2 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.